ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# சங்க இலக்கியங்களில் எட்டுத்தொகை பத்துப்பாட்டு நூல்களில் விறலியர்

**கலாநிதி துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ்**

**சிரேஷ்ட விரிவுரையாளர் (நடனத்துறை)**

**சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்**

**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**

1

**ஆய்வுச் சுருக்கம்**

பைந்தமிழ் கன்னித்தமிழ் செந்தமிழ் சங்கத்தமிழ் என்று பல வகையில் போற்றப்படும் நம் தமிழ்மொழி மிகவும் தொன்மையானது. சங்.கம் வைத்து உலகிற்கு கலைகளை வளர்த்தவர்கள் நம் தமிழர்கள். கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் ஒருங்கிணைக்கும் இயல்பு வாய்மொழி இலக்கியம் மற்றும் வழக்காறுகளுக்கு உண்டு. குறிப்பிட்ட சமூகத்தின் இன அடையாளம் பண்பாடு வரலாறு அரசியல் என்பவற்றினூடாக பண்டைய இலக்கியங்கள், இருப்பின் நிலையான நியாயத்தை நிலை நிறுத்தி வந்துள்ளன.

சங்ககால நூல்களான தொல்காப்பியம், சிலப்பதிகாரம், இறையனார் களவியல், ஐம்பெரும் காப்பியங்கள், ஐஞ்சிறு காப்பியங்கள், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பரதநாட்டியசாஸ்திரம் இன்னும் பிற நூல்கள் கலைகளின் இருப்பிடத்தையும், கலைஞர்களின் வாழ்வியல் முறைகளையும் நமக்கு படம்பிடித்தாற்போல் காட்டுகின்றன. சங்க காலங்களில் பாணர், கூத்தர், துணங்கையர், விறலியர், பாடினியர், கண்ணுளர், வயிரியர், கோடியர் என பல பிரிவினர் கலைத் தொழில் செய்து வாழ்ந்துள்ளனர். பாணர்கள் பாட்டுப் புணைந்தும் யாழ் இசைத்துக் கொண்டும் அவர்களின் துணையினர்களான துணைக்கியர், விறலியர் போன்றவர்கள் ஆட்டம் மற்றும் கூத்தக்களை நிகழ்த்தியுள்ளனர். சங்ககால மன்னர்களின் அவைகளில் பாணர்கள் பாடிட விறலியர்கள் ஆடிடவும் அவைக்களம் நிகழ்ந்துள்ளது. இவை மட்டுமன்றி போர்க்களங்களிலும் பாணர்கள் பாடும் தொழிலையும் மேற்கொண்டுள்ளனர். சங்க காலங்களில் இவர்களுடன் சேர்ந்து குறுநில மன்னர்களும் இக்கலைஞர்களுடன் சேர்ந்து ஆடியும் பாடியும் அவர்களைப் பாராட்டி பரிசில்கள் வழங்கியும் மகிழ்ந்தும் வந்துள்ளனர். கலை இணைந்த வாழ்க்கையாகச் சங்க காலச் சமூக வாழ்வு விளங்கியுள்ளது. இக்கோணத்தில் பண்டைய இலக்கிய தொகுப்புக்களான எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு ஆகிய நூல்களில் விறலியர்களின் அமைவுகளையும் மரபுத்தொடர்ச்சியையும் யதார்த்த நிலையையும் ஆராய்ந்து கூறுவதனை இவ் ஆய்வுக் கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**திறவுச் சொற்கள் -** விறலி, மரபு, சத்துவம், கூத்தர், ஆடல் மகளிர், பரத்தை

**முன்னுரை**

பைந்தமிழ் கன்னித்தமிழ் செந்தமிழ் சங்கத்தமிழ் என்று பல வகையில் போற்றப்படும் நம் தமிழ்மொழி மிகவும் தொன்மையானது. சங்.கம் வைத்து உலகிற்கு கலைகளை வளர்த்தவர்கள் நம் தமிழர்கள். கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் ஒருங்கிணைக்கும் இயல்பு வாய்மொழி இலக்கியம் மற்றும் வழக்காறுகளுக்கு உண்டு. குறிப்பிட்ட சமூகத்தின் இன அடையாளம் பண்பாடு வரலாறு அரசியல் என்பவற்றினூடாக பண்டைய இலக்கியங்கள், இருப்பின் நிலையான நியாயத்தை நிலை நிறுத்தி வந்துள்ளன.

சங்ககால நூல்களான தொல்காப்பியம், சிலப்பதிகாரம், இறையனார் களவியல், ஐம்பெரும் காப்பியங்கள், ஐஞ்சிறு காப்பியங்கள், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பரதநாட்டியசாஸ்திரம் இன்னும் பிற நூல்கள் கலைகளின் இருப்பிடத்தையும், கலைஞர்களின் வாழ்வியல் முறைகளையும் நமக்கு படம்பிடித்தாற்போல் காட்டுகின்றன. சங்க காலங்களில் பாணர், கூத்தர், துணங்கையர், விறலியர், பாடினியர், கண்ணுளர், வயிரியர், கோடியர் என பல பிரிவினர் கலைத் தொழில் செய்து வாழ்ந்துள்ளனர். பாணர்கள் பாட்டுப் புணைந்தும் யாழ் இசைத்துக் கொண்டும் அவர்களின் துணையினர்களான துணைக்கியர், விறலியர் போன்றவர்கள் ஆட்டம் மற்றும் கூத்தக்களை நிகழ்த்தியுள்ளனர். சங்ககால மன்னர்களின் அவைகளில் பாணர்கள் பாடிட விறலியர்கள் ஆடிடவும் அவைக்களம் நிகழ்ந்துள்ளது. இவை மட்டுமன்றி போர்க்களங்களிலும் பாணர்கள் பாடும் தொழிலையும் மேற்கொண்டுள்ளனர். சங்க காலங்களில் இவர்களுடன் சேர்ந்து குறுநில மன்னர்களும் இக்கலைஞர்களுடன் சேர்ந்து ஆடியும் பாடியும் அவர்களைப் பாராட்டி பரிசில்கள் வழங்கியும் மகிழ்ந்தும் வந்துள்ளனர். கலை இணைந்த வாழ்க்கையாகச் சங்க காலச் சமூக வாழ்வு விளங்கியுள்ளது.

இக்கோணத்தில் பண்டைய இலக்கிய தொகுப்புக்களான எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு ஆகிய நூல்களில் விறலியர்களின் அமைவுகளையும் மரபுத்தொடர்ச்சியையும் யதார்த்த நிலையையும் ஆராய்ந்து கூறுவதனை இவ் ஆய்வுக் கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**விறலியின் அமைவும் யதார்த்த நிலையும் வாழ்க்கை முறையும்**

விறலி என்பவள் உள்ளக் குறிப்பை புறத்தே வெளிப்படும்படி விறல்படி (திறம்பட) நடிப்பவள் திறம்பட ஆடும் மகளிர், மனக்குறிப்பு புறத்து வெளிப்பட்டபடி ஆடும் மங்கையர் என்று விறலியருக்கான வெளிப்பாடு ஆகும். "விரல்" என்பது சத்துவம் சுவைபட எண்சுவைகளையும் உடம்பிலும் முற்றிலும் காட்ட வல்லவர்கள் விறலியர். சத்துவம், அச்சத்துடன், மெய்ம்மயிர் சிலிர்த்தல் முதலியவை ஒன்பது வகை சுவைகள் ஏதேனும் ஒன்றை எண்ணினால் உடலில் தோன்றும், உடம்பை விட முகத்தில் மிகுதியாய் தோன்றும் முகத்திலும், கண்ணிலும் மிகுதியாய் தோன்றும், கண்ணிலும் கண்கடையில் நன்கு தோன்றும், இச்சத்தும் வெளிப்பட பாடி ஆடும் மகளிர் விறலியர் என்பது அறியப்பட்டது.

**“நரம்பின் முரலும் நயம் வரு முரற்சி விறலியர்**
**வறுங்கைக் குறுந்தொடி செறிப்ப" (ம.கா210-29)**

**எக்காலத்தும் இன்பம் தரும் யாழை இசைத்தாற் போல் ஆடும் மகளிர் தம் வறிய கையிலே குறிய தொடி அணிய என்று யாழ் இசைத்து ஆடும் விறலி மறை சித்தரிக்கின்றது.**

**" நரம்பு மீது இறவாது உடன் புணர்ந்து ஒன்றி**
**கடவது அறிந்த இன் குரல் விறலியர்" (530-538)**

மத்தளம் ஒலிக்க பெருவங்கியம் என்ற வேய்ங்குழல் இசைக்க, மருதப்பண்ணை எழுப்பி அப்பண்ணிற்கு மிகையாமல் அதனுடன் ஒன்றுபட்டு விளங்குமாறு தம் கடமைகளை நன்கு அறிந்தவரும் இனிய மிடற்றுப்பாட்டைப் பாடுபவரும் விறல்பட ஆடுபவரும் தொன்றுதொட்டு வரும் மரபு பிறழாது அரிய ஆற்றல் வரம்பில் ஆற்றல் உடைய விறலியின் இயல்பை விளக்குகின்றனர். தாளத்திற்கு தக்க பாத அடியிடல்தான் ஆடற்கலைக்கு அடிப்படை, ஆடல் சான்ற விறலி இயல்பான நடையிலும் கடை

காட்டுவாள். வையைப் புதுப்புனல் "ஆடல் அறியா அறிவைப் போலவும்" நாட்டிய நன்னூல் கடைப்பிடித்து அடியிடுதலும் அசைதலும் அற்றல் கற்பித்த நெறியே,

**“இறும் பூது ஒலி இன்குரல் விறலியர்**

**நறுங்கார் அடுக்கத்து குறிஞ்சிப்பாட" (மலை,536)**

**“கடவது அறிந்த இன்குரல் விறலியர்" (மலை,358-360)**

மலைபடுகடாமில் உறையும் தெய்வங்களைக் கவர வணக்கத்துடன் கூத்தரும், விறலியரும் குறிஞ்சி பண்ணை பாடவேண்டும் என்ற குறிப்பு காணப்படுகின்றது.

**“வண்டுபடு கூந்தல் முடிவுடை மகளிர் தொடைபடு**

**பேரியாழ் பாலை பண்ணி பணியா மரபின் உழிஞை பாட” (பதிற்றுப்பத்து)**

**பாணர் விறலியுடன் சேர்ந்து பாலைப் பண்ணில் தமிஞி பாடியதாக குறிப்பு காணப்படுகின்றது.**

**“ஆடல் மகளிர் பாடல் கொள்ளப் புணர்மார்தன்மையிற்**

**நரிந்த இன்குரல் தீற்தொடை கொம்மை வருமுறை**

**வெம்மையிற் நடைகிக் கருங்கோட்டுச் சீறியாழ் பண்ணுமுறை நிறுப்ப"**

ஆடல் மகளிராகிய விறலியர் யாழை மீட்டி அதற்குத் தக்கவாறு இனிமையாகப் பாடும் திறனும் பெற்றிருந்ததை நெடுநல்வாடை கூறுகின்றது. ஆடல் மகளிர் என்று கூறப்படும் விறலியர் இருவகைக் கூத்தாகிய அகக்கூத்தின் இலக்கணங்களையும் அறிந்து, விலக்குறுப்புகளைச் சேர புணர்க்கவும், வல்லவராய் அல்லியம் கொடுகொட்டி ஈறாகக் கிடந்த 11 கூத்துக்களும் அகக்கூத்திற்குரிய பாடல்களையும், அவற்றிற்கு உரிய இசைக்கருவிகளின் கூறுகளையும் நூல்கள் விதித்த வழியே தெரிந்து, கூத்தும் பாட்டும், தாளங்களும், தாளங்கள் வழிவந்த தூக்குகளும் தம்மிற் கடின நெறியுடைய அகப்புற கூத்துக்களை நிகழ்த்தவல்ல மகளிர் எனப்பட்டனர்.

**“ஒருதிறம் பாடல் நல் விறலியர் நல்குபுநுடங்க**

**ஒருதிறம் பாடினி முரலும் பாலையுங் குரலில்" (பரி.17-15-17)**

பாடலுடன் ஆடல் அறியும் திறன் பெற்றவள் விறலி என்ற குறிப்பு காணப்படுகிறது. விறலி தன் கூத்தாலும் இசையாலும் மன்னனை மகிழ்விப்பதால் விறலியர் அணிந்துகொள்ள இழையை அளித்ததாக புறநானூறு கூறுகின்றது.

**“முடவுமுதிர் பலவின் குடமருள் பெரும்பழம்**

**ஆடுமயில் முன்னதாகக் கோடியர் விழுவுகொள் மூதூர்**

**விறலிபின்றை முழவன் போல அகப்படத் தழீ இ" (அகம்,352)**

என்று விறலி ஆடுகையில் முழவன் பின்னால் தொடர்ந்து அடியிட்டு வந்து தாளமுறை முழ்விசைக்கும் மரபைக் காட்டுகின்றது. விறலியின் ஆட்டத்திற்கு தாளகதியை உருவாக்கும் இசைக்கருவியாக துடி பயன்பட்டுள்ளது. விறலியர் என்பார் ஆடல் மகளிராவர், ஆடல் பாடல் அழகு என்று கூறிய மூன்றும் நிறைந்தவராக அமைந்தமைக்குரிய பாண் சுற்றத்தோடு குன்று மலையும் பல பின்னொழியப் பரிசில் மக்களாக இவர் வள்ளன்மை மிக்கவரை நாடுவர். ஆகுளி பதலை எனும் இசைக்கருவிகள் விறலியின் ஆட்டத்திற்கு துணையாய் அமைந்தன. வெறியாட்டத்தில் பங்கேற்கும் வேலனின் ஆட்ட முறையானது இளம் நடன பெண்ணான விறலியின் உலாவி அசைந்தாடும் ஆட்டத்துடன் உவமையாக கூறப்பட்டுள்ளது. மன்னர்கள், புலவர், பாணர், விறலிக்கு பசிப்பிணி போக்கும் கடவுளர்களாக

விளங்கியுள்ளனர். 'மான' விறல் 'வயரியம்' (ம. படு மூ மானத்தையும் வெற்றியையும் உடைய மன்னனின் கூத்தர் ஆவோம்)

ஆற்றுப்படைக்குரியவராக விறலியும் எண்ணப் பெறுவர் விறலி ஒருத்தி மற்றொரு விறலியை ஆற்றுப்படுத்துவது விறலியாற்றுப்படை எனப்பட்டது.

**“நல்யாழ் ஆகுளி பதலையொடு சுருக்கிச்**

**சொல்லா மோதில் சில்வளை விறலி" (புற,64)**

என்று நெடும்பல்லியத்தனார் விறலியை ஆற்றுப்படுத்துவதாகப் பாடுவர். விறலியும் இசைவாணர் பிறரும் புற்கை கொள்ளும் வறுமை வாழ்க்கையர்.

**“ஒருதலைப் பதலை தூங்க ஒரு தலைத்**

**சுரன் முத்லிருந்த சில்வளை விறலி" ( புற 103)**

என்று அதியமான் நெடுமானஞ்சியை ஔவையார் ஆற்றுப்படையில் போற்றுகையில், விறலி ஒருதலைப் பதலையினையும், சிறுமுழாவினையும் காவடியைத் தோளில் சுமந்தவர் கையில் சிலாவாகிய வளையல் அணிந்தவர், ஒளி பொருந்திய நெற்றியினையுடைய விறலியே நீ பாரிவேள் பாற் சென்றால் சேயிழை பெறுவாய் ஔவையார் விறலியாக நின்று இசைபாடி புறப்பட்டால் வேந்தற்கும் விறலிக்கும் நிகழும் உரையாடல் உண்டு. "இழையணிப் பொலிந்த ஏந்து கோட் டல்குல் மடவரல் உண்கன் வானுதல் விறலி" என்பதில் விறலியின் இழைப்பொலிவும், இடைநலனும் கண்ணெழிலும் நுதற்சிறப்பும் கூறப்படுகின்றது.

விறலி என்பவள் ஆடல் திறன் ஒன்றே பெற்றவள் அல்ல, கண்டத்தார் பாடலும் கையால் கருவி இசைக்கவும் வல்லவள், விறலியர் பூவணிந்தாலும், பூவிற்கென கொடை பெறுவதும் விறலி சூடும் பூவிற்கு விலையாக மாடமதுரையை வேந்து நல்குவதாகக் கோவூர்கிழார் பாடுகின்றார்.

நெடும்பல்லியத்தனார் என்ற புலவர் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதியிடம் விறலியை ஆற்றுப்படுத்தியுள்ளார். (புறம் 66) கபிலர் வேள்பாரியிடம் விறலியை "சேயிழை பெருகுவை வாள் நுதல் விறலி" (புறம்108) என்ற அடிகளில் காணமுடிகின்றது.

ஆடற்கலை விறலி அக்கால இசைக்குழுவில் இன்றியமையா உறுப்பினராவாள். ஆடலுடன் பாடும் திறனும் அழகாக அமைந்தவளாகவும் வர்ணிக்கப்படுகின்றது. "ஒண்ணுதல் விறலியர்" (பொ.ஆ107-111) என்ற வரிகளில் ஆடும் மகளிர் அழகுடையவராக இருத்தல் வேண்டும். நெற்றியின் அழகைச் சொல்லவே ஆடும் மகளிரின் பண்பு ஆடல், பாடல் அழகு என்பனவாகக் கூறப்பட்டுள்ளது.

**"தொடை அமை மாலை விறலியர் மலய" (பெரு-ஆ-486)**

என்ற அடிகளில் இருள் வானத்துத் திங்கள் போன்று வண்டு மூசாத தீயிற் பிறந்த பெண் பொற்றாமரை நெடிய கரிய மயில் அளகுறச் சூட்டி வலிய கடலின் நீரை முகந்து கொண்ட முகிலினின்றும் பகற்காலத்தே பெய்யும் துளியுரு மின்னல் ஒடினாற் போன்று கைது செய்யப்பட்ட கூந்தல் அழகுறும் படி பொன்னால் செய்து தொடுத்தல் அமைந்த இந்த மாலையை விறலியர் சூடா நிற்பர், மெல்லியதாய் வீழ்ந்து தாழ்கின்ற மேகத்தின் அழகைத் தன்னிடத்தே கொண்டு மேலும் எண்டுணயிலே முற்றுப் பெற்று இருண்ட கூந்தல், நீலமணியைப் போன்ற கண்ணை உடைய தோகைகளை விரித்து பலவும் ஒன்று சேர ஆண் மயில்கள் அம்மகளிரின் சாயலுக்கு நிகராக மாட்டோம் என நாணம் கொண்டு தம் பெண் மயில்களுக்குப் பின்னால் மறைதற்கு காரணமான மென்மை ஒடி இழைப்பை அடைந்த நாயின் நாவைப் போன்ற அணிகலன் அணியாத அடி, பெண்யானையின் கை போல் திரண்ட செறிந்த

தொடை வாழையின் பூவைப் போன்ற கூந்தல், வேங்கை மலர் போன்ற சுணங்கு கோங்கின் அம்பு போன்ற அணிகலன்கள் அடங்கிய மார்பகங்கள் நுங்கின் நீர்போன்ற இனிய நீர் ஊறும் பற்கள், முல்லை சூடுதல் கேட்ப கற்பு, மெல்லியல்பு மான் போன்ற பார்வை, ஒளியுடைய நெற்றி என "ஐது வீழ் இடுபெயர் அழகு கொண்டு அருளி" (சி.பா) ஓங்கிய பெரிய மலைகளை ஏற்றுவதால் வலிமை குன்றிய நாய்களின் நாவினைப் போன்ற கற்கள் உறுத்தப் பெற்றதால் மெலிந்த சிறிய அடிகளை உடைய விறலியர், மயில் தோகை போன்ற கூந்தலை தாழ்ந்து அசைத்து நடக்கின்ற யாரோடு மாறுபட்ட சிவந்த கோகொளையுடைய வளையளையுடைய விறலியர் ,என்றும் சிறுபாணாற்றுப்படையில்(1-12) மூங்கில் என்ற தோலை உடைய நிலமடந்தையினது முலை மீது கிடந்து அசையும் முத்துமாலை போன்றது. ஓடும் நீரால் வருந்தியது. தொலைவிநின்று வருவதுமாக கான்யாரு, அதன் கரையில் உள்ள நறுமணம் கமழும் சோலை, விறலியர் அச்சோலையின் குயில் தன் அலகால் குடைகிறதால் கீழே உதிர்ந்த உலர்ந்த மலரைச் சூடி நிலைகளின் கூந்தல் விரிந்து கிடந்தது, போல் தோன்றுகின்ற கரிய மலையானது கரும் பொன்வெம்மை ஏற்பட்ட தன்மை உடையதாய் வெம்மை உர மணல் பரப்பில் மெல்ல நடந்து மேலும் வெயிலால் வெப்பமுடைய கூர்மையான, பரல் கற்களும் கால்களைக் கிழித்திட முதுவேனில் நாட்கள் நிகழும் பருவத்தில் ஞாயிறின் வெப்பம் காலையிலே வெம்மை மிகுந்து விளங்குவதால், பாலை தன்மையுடைய நீண்ட சுரண் வழியே நின்ற கடம்ப மரத்தின் வரி நிழலில் தங்கினர். என்ற அடிகளில் விறலி தன் ஒப்பனை மிகுந்த கூந்தல் மற்றும் விறலி பூங்குழை என்ற காதணியை அணிந்திருந்தார். நன்னனை காணச் சென்ற கூத்தருடன் இருந்த விறலியர், இலங்குவளை விறலியர் எனப்பட்டனர், இவ்விறலியரே செறிதொடி விறலியர் எனவும், கைகளில் வளைகளையும் தொடியையும் அணிந்த மை தெரிகின்றது. விறலி "வண்டிருப் பன்ன பல்காழ்" என்றும் ஒரு வகை அணியை அணிந்திருந்தாள் வண்டினங்களின் இருப்பை ஒத்த பல மணிகள் கோர்த்த வடங்களை உடைய மேகலையை அணிந்தாள் விறலியின் மார்பை பூணகம் உலகம் என்ற அணி அழகு செய்தது. நன்னனை விறலியர் அணிய விளங்கிழை தருவான்.

மன்னன் இளந்திரையன் விறலிக்கு கூந்தலில் அணி பொன்மாலை வழங்கினான் விறலியர் மலைவாழ் தெய்வங்களைப் பணிந்து குறிஞ்சிப் பண்ணில் பல பாடல்களை பாடுதல் மரபு, அவர்கள் முதலில் கடவுளை வாழ்த்தினார்கள், பின்னர் பல பாடல்களைப் பாடினார்கள், விறலியர்கள் சென்ற வழிகளில் பாம்புகள் பதுங்கிக் கிடந்தன.

**"செறி தொடி விறலியர் கைதொழ உப்பழச்ச" (மலை,201)**

என்ற அடிகளில், விறலியர்கள் பாம்புகளைக் கைதொழுதமை புலனாகும், இலக்கணத்தில் வருணனை என்பது ஒரு வகை, சிறுபாணாற்றுப்படையில் விறலியை அந்தாதி போலவும், சங்கிலித் தொடர் போலவும், மாலை உவமை போலவும், சொற்பொருள், பின்வருநிலை போலவும் பல வகையில் சுவைக்கத்தக்க நிலையில், பெண்டிரை வர்ணிப்பதை முடிமுதல் அடிவரை வர்ணிப்பர். இங்கு,முடியில் தொடங்கி அடியில் வந்து, பின்பு அடியில் தொடங்கி முடிக்கு செல்கின்றனர். நற்றினையில் தலைவனிடம் இருந்து வந்த பாணனை தோழி நொந்துரைத்தலும் வெண்டுரைத்தலும் கூறப்படுகின்றது. அக்கால அரசவையில் விறலியும் முக்கிய பங்கு வகித்தனர் என்பதை "அழல் புரிந்த அடர் தாமரை"(புறம் 28:1-5) சங்க இலக்கியத்தின் வழி உணரலாம். பரத்தையன் கூற்றாக அமையும்

பாணரின் 100 பாடலும் விறலி பரத்தையின் தோழியாக காட்டப்படுவதை உணரலாம்.

**முடிவுரை**

விழாக்களில் மக்களிடமும் போர் வெற்றி காலங்களில் அரசர்களிடமும் பாடி, ஆடி பரிசில் பெற்றுவந்த விறலியர் காலப்போக்கில் செய்யுள்களை இயற்றுவதில் திறன் வாய்ந்த சில புலவர்கள் பாணர்களையும் உடன் இணைத்துக் கொண்டு ஒரு கலைக்குழுவை உருவாக்கி கலைக்குழுவோடு மன்னர்களைச் சந்திப்பது என்ற மரபு உருவானது என்பதற்கு புறநாநூற்றுப் பாடல் சான்றுபகர்கின்றது.

**உசாத்துணை நூல்கள்**

1.அம்மன்கிளி முருகதாஸ், சங்கக் கவிதையாக்கமும் மரபும் மாற்றமும், கொழும்பு – சென்னை, 2006

2.கைலாசபதி.க, தமிழில் வீரநிலைக் கவிதைகள், கொழுமு;ப – சென்னை, 2006

3.சதீஸ்.அ, சங்க இலக்கிய விறலியர், சென்னை, 2007

4.சிவத்தம்பி.கா, பண்டைய தமிழ்ச் சமூகத்தில் நாடகம், சென்னை, 2005

5.சுந்தரேஸ்வரன்.எம், சிறுபாணாற்றுப்படையில் விறலியர் பங்கு

6.ஷாஜகான்கனி.வெ.மு, தமிழ் நாடகக் கலைக்களஞ்சியம், 2010